# காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்
# 07.11.2022 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தின்
# தீர்மானம் நகல்

பொருள் எண் :1

அரசாணை (நிலை) எண். 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி காயல்பட்டினம் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி / காலியிட வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நகர்மன்ற தீர்மான எண்.27 நாள்-07.04.2022 அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் அலுவலக விளம்பர பலகையிலும் தினசரி நாழிதழ்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:30.03.2022-ல் தெரிவித்துள்ளபடி, பொதுமக்களிடம் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் பெறப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.61 நாள்.20.05.2022-ல் பெறப்பட்டுள்ள ஆட்சேபனைகளின்படி, இந்நகர் பகுதியில் 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு செய்வதை தமிழக அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென கேட்டு தீர்மானம் நிரைவேற்றப்பட்டது. அதன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி கோரி அரசுக்கு அனுப்பப்பட்டது.

அதனைதொடர்ந்து அரசு கடிதம் எண்-11622/ந.நி.4(1)/2022-1,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை,நாள்-27.07.2022. ன்படி, காயல்பட்டினம் நகர்மன்ற தலைவருக்கு காரண விளக்கக் கடிதம் கோரப்பட்டது.

அதன்படி காயல்பட்டினம் நகர்மன்ற தலைவரின் கடிதம் நாள் 26.08.2022.ன்படி நகர்மன்ற தலைவரின் காரண விளக்கங்கள் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசாணை (நிலை) எண்: 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.03.2022-ன்படியானதை மறுபரிசீலனை செய்யக் கோரி காயல்பட்டினம் நகர்மன்ற தலைவர் அளித்த காரண விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்பதால் தமிழ்நாடு மாவட்ட

நகராட்சிகள் சட்டப் பிரிவு 36(1) (i)-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் காயல்பட்டினம் நகர்மன்ற தீர்மானம் எண்.61, நாள்:20.05.2022-ஐ இரத்து செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே அரசாணை (2D) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள்.02.11.2022-ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றியும் காயல்பட்டினம் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்து வரி / காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளலாம் என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அரசாணை (2D) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள்.02.11.2022-ன்படி இந்நகராட்சியில் 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ள இருப்பதை மன்றம் பதிவு செய்யலாம்.
(கோப்பு எண்:-417/2022/A2)

தீர்மான எண்.213

1. அரசாணை பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
2. 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு அரசு தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

ஒம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது
நகர்மன்ற தலைவர்,
காயல்பட்டினம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
காயல்பட்டினம் நகராட்சி